REGD M 4642.

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 1½ காசு

மலர் 7 | 10 – 4 – 49 | இதழ் 41

# புலமைக்குப் பொருள் புளுகுவதுதானா?

ஒருவர் புலவர், மற்றவர் புலமையற்றவர்; என்ற போதிலும் இருவரும் நண்பர்களாகவே இருந்தனர். புலவர், தம்முடைய புலமையினால் தம்முடைய நண்பரைத் திகைக்க வைப்பது வழக்கம். எப்ப பார்த்தாலும் ஏதாவதொன்றைக் கூறித் தம்முடைய [illegible] விடுவார். தாம் இவ்விதம் செய்வதை ஒரு பெருமை என்றே புலவர் எண்ணிக்கொள்வார். 'இப்படிப் பட்டவர்களும் உலகில் உயிரோடு உலவுகின்றனரே' என்றுகூட அந்தப் புலவர் எண்ணித் தம்முடைய புலமை கண்டு புளகாங்கிதமடைவதுண்டு. புலவர் இவ்வாறெல்லாம் தம்மைக் கிண்டல் செய்வதை அந்த நண்பர் தவறாகக் கொள்ளாமல், தம்மிடமுள்ள பற்றுதல் காரணமாக நகைச்சுவையாகப் பேசி அளவளாவுகிறார் என்றே முதலில் எண்ணியிருந்தார். ஆனால், இது நீடிக்கவில்லை. புலவர் தம்முடைய புலமைக்குத் தாமே முற்றுப்புள்ளி இடுகிறோமே என்பதையும் மறந்து, வர வரத் தமது வாயாட்டத்தை அதிகப்படுத்திக் கொண்டேவந்தார். இதை நண்பரால் சமாளிக்க முடியவில்லை. "இந்தப் புலவர் எனக்கு நண்பராய் இருந்தும்—என்னிடம் புலமை இல்லை என்பதைத் தெரிந்திருந்தும்—ஏன் என்னிடம் தம்முடைய புலமையைக் காட்டுகிறார்" என்று எண்ணினார். "ஏட்டுச் சுரைக்காய்ப் புலவரான இவர், எனக்கு இயற்கையாக இருக்கக்கூடிய அறிவுகூட இல்லையென்று கருதி என்னிடம் ஏதேதோ பேசி எக்களிப்படைகிறாரே, ஏன்?" என்றும் எண்ணினார். "இவரோ என்னுடைய நெடுநாள் நண்பர். இவரைப் பகைத்துக் கொள்ளவும் என்னுடைய பகுத்தறிவு இடம் தரவில்லையே" என்றும் கவலைப்பட்டார். எப்படியாவது இவருடைய இறுமாப்பை அடக்கவேண்டுமென்று உறுதிகொண்டார். சிலகாலம் அந்த நண்பர் இந்தப் புலவரின் கண்களில் படாமலேயே இருந்துவந்தார்.

ஒரு நாள், திடீரென்று இந்தப் புலவர் அந்த நண்பரைக் காண நேர்ந்தது. அப்போது புலவர் தம்முடைய நண்பரின் நலனை உசாவும் முறையில், அவருடைய வாழ்க்கை வளமாக நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்பி, "நண்பரே, உமக்கு என்ன கிடைக்கிறது?" என்று தம்முடைய புலமை கலந்த கேள்வியால் கேட்டாராம். இதனைக் கேட்ட அவருடைய நண்பர் உடனே,

"எனக்குமாசம்பத்துக் கிடைத்து வருகிறது."

என்று விடை அளித்தாராம். இதைக் கேட்ட புலவர், "மாசம் ஒன்றுக்குப் பத்து ரூபாதான் கிடைக்கிறதா? இதை வைத்துக் கொண்டு நீர் எப்படி வாழ்க்கையை நடத்துகிறீர்" என்று கேட்டாராம். இதைக் கேட்டதும் அந்த நண்பர் குலுங்கக் குலுங்க நகைத்துவிட்டு, "புலவரே! உம்முடைய புலமை எல்லாம் இவ்வளவுதானா? நான் சொன்ன வாசகத்திலுள்ள பொருள் என்ன என்பதைக்கூட உம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லையே! உம்முடைய புலமை எல்லாம் எங்கே போய்விட்டன?" என்று கேட்டாராம். புலவருக்கு ஒன்றுமே புலனாகவில்லை. தம்முன் நிற்பவர் தம்முடைய பழைய நண்பர்தானா என்ற ஐயம்கூட அவருக்குண்டாகி விட்டதாம். ஒருமுறைக்கு இருமுறை அவரை நன்றாக உற்றுப் பார்த்து, அவர் தம்முடைய பழைய நண்பரேதான் என்ற முடிவுக்கு வந்து, "என்ன, நண்பரே! நீர் புகன்றதொன்றும் புரியவில்லையே!" என்றாராம். அதற்கு அந்த நண்பர், "நீரோ எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தவர்; நானோ ஏதும் அறியாதவன்; அப்படியிருந்தும் என்னைக் கேலி செய்யும் முறையில், நான் கூறிய வாசகத்துக்குப் பொருள் கொண்டு, என்னைக் கேவலம் மாசம் ஒன்றுக்குப் பத்து ரூபா பெற்று வாழ்பவன் என்று இழிவாகப் பேசுவது முறையா" என்று மேலும் கேட்கவே, புலவர்பாடு திண்டாட்டமாகி விட்டது. "நான் என்னுடைய நண்பரிடம், உம்முடைய வாழ்க்கையை நடத்துவதற்குப் போதிய வருவாய் கிடைத்து வருகிறதா என்றுதானே கேட்டேன்; அவர் அதற்கு, எனக்கு மாசம்பத்துக் கிடைத்து வருகிறது என்று சொன்னார். மாசம் ஒன்றுக்குப் பத்து ரூபா எப்படிப் போதும் என்று கேட்டால், இவ்வளவுதானா உம்முடைய புலமை என்று கிண்டல் செய்கிறார். 'மாசம் பத்துக் கிடைக்கிறது' என்ற வாசகத்துக்கு வேறு பொருள் இருப்பதாகவும்

தெரியவில்லையே! நாமோ புலவர்! அவரோ சாதாரண பேர்வழி! எத்தனையோ தடவை நான் அவரை என்னுடைய புலமையினுல் மடக்கியிருக்கிறேனே! இப்போது அவர் நம்மை நாவசைக்க முடியாதபடி செய்துவிட்டரே!" என்ற ஏக்கமும் கலக்கமும் புலவருக்கு ஏற்பட்டு, என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்த நிலையில், தம்முடைய புலமை அனைத்தையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, நண்பரை நோக்கி, "நீர் கூறிய வாசகத்தின் உண்மையான பொருள்தான் என்ன?" என்று வெட்கத்துடன் கேட்டார். அதற்கு அந்த நண்பர், "எனக்குக் கிடைப்பது மாசம் பத்தல்ல, மா-சம்பத்து, அதாவது மா—பெரிய, சம்பத்து—செல்வம் கிடைக்கிறது" என்று விளக்கம் கூறினாராம். இதைக் கேட்ட புலவர் வெட்கித் தலை குனிந்து போய்விட்டாராம். நுண்ணிய அறிவு வெறும் புலமையினுல் மட்டும் ஏற்பட்டுவிடாது, பகுத்தறிவும் அதற்கு வேண்டும் என்ற பண்பை அந்தப் புலவர் அதன் பின்னர்தான் உணர்ந்தாராம்.

இந்த நிலையில்தான் இன்று நம் தமிழ்நாட்டுப் புலவர் பலர் இருக்கின்றனர். புலமையும் பகுத்தறிவும் ஒன்று சேரக்கூடாதென்னும் போக்கினர் இவர்கள்.

ஏதாவதொன்றுக்குஒரு பொருள்தான் இருக்கும். இன்னொன்றுக்கு இரண்டு பொருள்களும் அதற்கு மேலும் இருக்கும். எடுத்துக் காட்டாக "வேலை" என்ற தமிழ்ச் சொல் பொதுவாகவே "தொழில்" என்ற பொருளைத்தான் தரும். அதற்கு இன்னொரு பொருளும் உண்டென்று புலவர் பெருமக்கள் புகல்வர். அதாவது "கடல்" என்ற சொல்லுக்கு "வேலை" என்ற சொல்லும் பொருந்தும் என்பர். எப்படியென்றால், கடலானது அலையடித்தலாகிய வேலையை ஓயாது செய்துகொண்டிருப்பதால், அதற்கு "வேலை" என்ற பெயரும் ஏற்பட்டதென்று விளம்புவர். இவ்வாறு சிற்சில தமிழ்ச் சொற்களுக்கு இயற்கையாகவே ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் ஏற்படுவதுண்டு. இவ்வாறு பொருள் ஏற்படுவது ஒரு சொல்லுக்கு மட்டுமல்ல, ஒரு சொற்றொடருக்கே கூடப் பலபொருள்கள் ஏற்படுவதுண்டு. மாசம்பத்து,மா-சம்பத்தாகவும், பொன்னாடு, பொன் ஆடாகவும் புலவர் பெருமக்களால் பொருள் கொள்ளப்பட்டுப் 'புகழ்' பெறும் வழக்கம் நம் நாட்டைத் தவிர வேறெங்கும் அவ்வளவாகக் கிடையாது. எடுத்துக் காட்டாக ஒரு நிகழ்ச்சியை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம்.

இரண்டு புலவர்கள் ஓர் நாள் இரவில் வழி நடந்து சென்றார்கள். பனிக் காலமாக இருந்ததால், பனியின் கொடுமையை விளக்கப்புகுந்த ஒரு புலவர் மற்றப் புலவரை நோக்கி,

"பனிக்காலம் தீது"

என்றார். அதனைக் கேட்ட அந்தப் புலவர்,

"பனிக்காலம் நன்று"

என்றார். இதனுல், இரு புலவர்கட்கிடையே பெருஞ் சண்டை மூண்டுவிட்டது. பனிக்காலத்தைத் தீதென்று கூறியவர், அதனை நல்லதென்று கூறிய புலவரை நோக்கி, "நீ எப்படிப் பனிக்காலத்தை நல்லதென்று கூறலாம்" என்று கேட்க, அதற்கவர், "நானும் அதனைத் தீதென்றுதான் கூறுகிறேன்" என்று கூற, "இல்லை, நீ கூறுவதில் பனிக்காலம் தீதென்று எப்படிப் பொருள் ஏற்படுகிறது" என்று கேட்க, அதற்கவர், தாம் கூறிய 'பனிக் காலம் நல்லது' என்ற சொற்றொடரை மறுபடியும் கூறி அதற்கு விளக்கமுரைத்தாராம். அதாவது "பனிக்காலம் நல்லது" என்ற நான் கூறிய சொற்றொடரைப் பிரித்தால், "பனிக்காலம்" என்றசொற்றொடர் பனிக்கு-ஆலம் என்று இரு சொற்களாகிப், பனியைப் பார்க்கிலும் 'ஆலம்' அதாவது நஞ்சு நல்லது என்ற பொருளைத் தந்து, பனிக்காலம் தீதென்று நீர் கூறியதையே மேலும் நன்றாக வலியுறுத்தி, நஞ்சைவிடப் பனி தீதென்று விரிவுரை கூறி விளக்கம் உரைத்தாராம். ஒரு சொற்றொடருக்கு இரண்டு பொருள்கள் ஏற்படுவது போலவே, நாம் மேலே எடுத்துக் காட்டியது போலவே, இரண்டு சொற்றொடர்களுக்கு ஒரே பொருள் ஏற்படுவதும் உண்டு. இவையெல்லாம், தமிழ் மொழியின் ஒப்புயர்வற்ற தனிப் பெருஞ் சிறப்பைக் காட்டுவனவாகும். ஆனுல், இவற்றையெல்லாம், நம்முடைய தமிழ்ப் புலவர்கள், தங்களுடைய புலமைக்கு அரண் தேடுவதில் பயன்படுத்தி இவற்றிற்குள்ள உண்மையான மதிப்பையே கெடுத்துவிடுகின்றனர். படிப்பறியா மக்கள் இவர்களின் புலமைப் பித்தலாட்டங்களை அறிந்துகொள்ள முடிவதில்லை. புலவர்கள் தங்கள் பிழைப்புக்கு வழி தேடிக்கொள்ள எதை வேண்டுமானுலும் எப்படியும் கூறலாம்; 'நாம் புலவர்கள், நாம் கூறுவதைத்தானே அந்தப் 'புல்லர்கள்' நம்பியாகவேண்டும்' என்ற ஆணவத்துடன், அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆளைப் பார்த்து அறிவை விற்கின்றனர். அகப்பட்ட வரையில் இலாபம் என்பதைத் தவிர, இவர்களிடம் உண்மையான குறிக்கோள் எதுவும் இருப்பதில்லை.

ஒரே புலவர் சுயமரியாதைச் சங்கத்திலும் பேசுவார்—சைவ மெய்யன்பர்கள் கூட்டத்திலும் பேசுவார். பேசும் பொருளும் ஒன்றாகவே இருக்கும். ஆனுல், கருத்தில் கனத்த மாறுபாடுகள் காணப்படும். சுப்பிரமணியக் கடவுளைப் பற்றிச் சைவ மெய்யன்பர்கள் கூட்டத்தில் பேசும் போது, கந்தபுராணமே அவருக்கு ஆதாரமாக நிற்கும். அக்னிப் பொறிகள் ஆறுமுகக் கடவுளாகி, வள்ளியை வனத்தில் மணந்து, தெய்வயானையைத் தேவலோகத்தில் மணந்து, சூரபதுமனை மாய்த்து, பழத்துக்காகப் பறந்து பழனியில் தங்கிப், பின் சம்பந்தராகப் பிறந்து சமணர்களைக் கழுவேற்றிச் சைவத்தைக் காத்த செய்தி வரையில் ஒன்று விடாமல் ஒப்பித்துப் பாலும் பரிசும் பெறுவார்.

ஆனுல், அதே புலவர் சுயமரியாதைச் சங்கத்தில் பேசும்போது அவருக்குப் பகுத்தறிவே ஆதாரமாக நிற்கும். சுப்பிரமணியரைப் பற்றிப் புராணங்களில் கூறப்படும் கதைகளை எல்லாம் கட்டுக் கதைகளாக்கி, அவருக்கு ஒரு தனி விளக்கம் கொடுப்பார். அதாவது, சுப்பிரமணியன் என்றோ முருகன் என்றோ ஒரு கடவுள் எங்கும் கிடையாது-பண்டைக்காலத் தமிழ் மக்கள் பகலவனையே கடவுளாக வைத்து வழிபட்டனர் — ஏன் பகலவனை (சூரியனைக்)கடவுளாக வைத்து வழிபட்டனர் என்றால், "அக்காலத்தமிழ் மக்கள், பகலவன் உலகுக்கு ஒளியை வழங்கும் பெருஞ்செயலை மேற்கொண்டிருப்பவனுதலால், அவனுக்கு நல்ல மதிப்பைக் கொடுத்துப்

(11-ம் பக்கம் பார்க்க)

# விதியா? :: வீணரின் சதியா?

(வீ. சம்பந்தன்)

அன்றுமாலை ஆறுமணி இருக்கும், கலங்கிய கண்களுடன், கவலை தோய்ந்த முகத்துடன் கட்டிலில் சாய்ந்திருந்தேன். பக்கத்தறையில் எனது கணவர் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தார். டாக்டரோ, இன்னும் நம்பிக்கையை இழக்காதவர் போல் இஞ்செக்ஷன் செய்துகொண்டிருந்தார். சுற்றத்தார்கள் சுற்றிலும் சூழ்ந்து கொண்டிருந்தனர். எல்லோர் முகத்திலும் பிரேதக்களை நிலவியது. அழுதுகொண்டிருந்தால் சரியாய்ப் போய்விடுமா? எழுந்திரு கோவிலுக்குப் போய்வரலாம், என்ற குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தேன். எதிரே எனது மாமியார் நின்று கொண்டிருந்தாள். அன்று மூன்றுவது நாள் சனீஸ்வரனுக்கு எண்ணெய் போட்டு, அர்ச்சனை பண்ணிக் கொண்டுவந்து. எனக்கு இவற்றிலெல்லாம் துளிகூடநம்பிக்கையில்லை. என் செய்வது? இதை வெளிப்படையாகச் சொன்னால் என்ன நினைப்பார்கள்? கணவன் சாகக்கிடக்கிறான்! கவலையில்லாமல் நடந்துகொள்கிறாள் என்று தூற்றமாட்டார்களா? ஆகவேதான் வெட்ககரமான இந்த வேதனையை, துக்ககரமான அந்த வேதனையோடு தாங்கிக்கொண்டு நடைப் பிணம் போல் இரண்டு நாளாய் சென்று வந்தேன். சனீஸ்வரனை நானும் பார்த்ததில்லை. நீங்களும் பார்த்திருக்கமாட்டீர்கள். ஆனால் எனக்கென்னமோ என் மாமியாரே சனியனாகத்தோன்றினாள். எதையோ சொல்லவந்த நான் ஆத்திரத்தில் எங்கேயோ சென்றுவிட்டேனே, மன்னிக்கவும். அன்றும் அழாக்குறையாகக் கோவிலுக்குக் கிளம்பினேன், கோவில் வேலையை முடித்துக் கொண்டு வெளியே வரும்போது "கணவன் வீட்டிலே உயிருக்கு மன்றாடுகிறான். இவள் இங்கு சனீஸ்வரனிடம் உயிர்ப் பிச்சை வாங்குகிறாள் போலிருக்கிறது. நவீன சாவித்திரியோ என்று சிலர் நகைத்தது என்காதில் விழுந்தது. அதைத் தொடர்ந்து, காலிகளெல்லாம் கோயிலில் வந்து கூடிவிட்டன என்று என் மாமியாரின் முணுமுணுப்பும் கேட்டது. வேகமாக வீடுசெல்ல ஆரம்பித்தோம். சகுனங்களெல்லாம் நன்றாய்த்தானிருக்கு, பயமில்லை என்று ஆறுதல் கூறினாள். எனக்குத் துளிகூட நம்பிக்கையில்லை. வீட்டின் வாயற்படியில் காலெடுத்து வைத்தேன். ஓரே கூக்குரல். தொடர்ந்து ஐயோ!ஐயோ! என்ற அலறல். வாயற்படியில் கால் வைத்தது அனல்மேல் கால்வைத்தது போலிருந்தது. அலறித்துடித்துக் கொண்டு அவர் பக்கத்தில் போய் வீழ்ந்தேன். அங்கு கண்ட அந்தக் கோரக்காட்சி அவ்வளவுதான்! அழுதேன், அலறினேன். அப்புறம் என்ன நடந்தென்று எனக்குத் தெரியாது. மறுபடி பிரக்ஞை பெற்றெழும்போது என் பக்கத்தில் ஒரு சிறு கூட்டம் கூடியிருந்தது. மறுநாள் பிரேதம் எடுத்துச்செல்லப்பட்டது. அன்றைய கதை அலங்கோலமாக முடிந்தது.

*   *   *

தஞ்சை மாவட்டத்திலேயே எனது தந்தை ஒரு பிரபல சோதிடர். ஏன், தமிழ் நாட்டிலே நன்கு பிரக்யாதி பெற்றிருப்பவர். தினம் ஐம்பதுக்குக்குறையாதவர்கள் வெளியூர்களிலிருந்து கார்களிலும், வண்டிகளிலும் கால்நடையாகவும் வந்து சேருவார்கள். "உங்களுக்குத்தான் தெரியுமே, நான் ஜீவனத்துக்காகத் தொழில் செய்பவனல்ல வென்று. என் சோதிடம் பொய்யானால் இத்தொழிலுக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு, வெளியே கிளம்பி விடுகிறேன்" என்று சவால் விடுவார். அவரது சோதிடங்களில் எத்தனை பொய்த்ததோ, எத்தனை நடந்ததோ எனக்குத் தெரியாது. ஆனால் அவர் இன்னும் தொழிலுக்கு மட்டும் முழுக்குப் போடவில்லை. அவருடைய ஒரே மகள்தான் நான். சிறு வயதிலிருந்தே என்னை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார். செல்லமாகக் கவலையற்று வளர்ந்ததனாலோ, என்னவோ வயதுக்கு மீறிய வளர்ச்சியுடையவளாகவே காணப்பட்டேன். அதன் காரணமாக ஒன்பதாம் வகுப்புப் படிக்கையிலேயே பள்ளிக்குச் செல்லவேண்டியதை நிறுத்த வேண்டியதாகிவிட்டது. எனக்கோ எஸ். எஸ். எல். ஸி. வரையிலும் படிக்கவேண்டுமென்ற ஆசை. ஆனாலும் நான் பெண்தானே! எனக்கு உரிமை ஏது? சுதந்தரமேது? பெண்கள் என்றாலே, ஆண்களிடம் அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டிய பிறவிகளாகத்தானே கருதப் படுகின்றனர். அதுமட்டுமல்ல, பாழாய்ப்போன இந்த இந்து மதத்திடம் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஏனென்று கேட்கிறீர்களா? எதிர்த்த வீட்டுப்பெண், அவள் என்னுடைய வகுப்பு மாணவியுங்கூட, ஒரு கிறிஸ்தவப் பெண். இன்னும் சொல்லப் போனால் என்னை விட இரண்டு வயது மூத்தவள். அவள் படித்துக்கொண்டுதானிருக்கிறாள். அதுமட்டுமல்ல, தொடர்ந்து கல்லூரி வரையிலும் படிக்கப்போகிறாளாம். அப்படியிருக்க இப்பாழும் சமுதாயத்தில் மட்டும், பெண் பருவமடைந்தவுடன் சிறையிலே தள்ளிச் சித்திரவதை செய்கிறார்களே,

"எட்டையும பெண்கள் தொடுவது
தீமை
யென்றெண்ணி யிருந்தவர் மாய்ந்து
விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப்
பூட்டிவைப்போ—மென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

என்று பாரதியார் பாடிச் சென்று பலவருடங்களாகியும் பாழாய்ப் போன இந்து சமுதாயம் அப்படியே தானிருக்கிறது. இப்படியாகச் சிறை வாழ்விலே நாட்கள் பறந்தன, மாதங்கள் ஓடின. வருடங்கள் இரண்டு மெதுவாக நகர்ந்தன.

அப்போது அடிக்கடி எனது தாய்க்கும், தந்தைக்குமிடையே, எனது மணப்பேச்சு நடந்துகொண்டிருந்தது. இப்பேச்சு வளர வளரச் சிறையிலே கிடைத்த சிறிது நிம்மதியும் சிதற ஆரம்பித்தது. இப்போதாவது கூண்டிலடைபட்ட கிளியாகவாவது இருக்கிறோம். ஆனால் கூண்டைத் திறந்துவிட்டு மணம் என்ற பெயரால் பூனையிடம் ஒப்படைத்தால் என்னவது? ஆகவே அமைதியாகச் சென்றுகொண்டிருந்த என் வாழ்க்கைப் படகிலே, அச்ச அலைகள் வந்து மோத, மோத, அமைதி குலைந்து கவலை குடிகொள்ள [illegible] பித்தது. இருந்தாலும் [illegible]

என்றால், உடனேயாவா நல்ல மணமகன் கிடைத்துவிடுகிறார். அப்பாவுக்குப் பிரியமாயிருந்தால், அம்மாவுக்குப் பிடித்தமிருக்காது, அம்மா விரும்பியவரை அப்பா ஆட்சேபிப்பார். இப்படியாக ஒத்திவைப்பு நாடகம் சிறிது நாளைக்காவது நடக்குமே! திருமணப் பேச்சு ஆரம்பித்த உடனேயே எங்கே அவ்வளவு சீக்கிரமாக முடியப்போகிறது என்ற அசட்டுத் தைரியமும் இலேசாக இருந்தது. ஆனாலும் என்னைப் பொறுத்தவரையில் இந்த ஒத்திவைப்பு நாடகம் அதிகநாள் நீடிக்கவில்லை.

ஒரு நாள் காலை, ஒன்பது மணி இருக்கும். காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு கூடத்துப் பக்கம் வந்தேன். 'நம் மங்களத்தை இப்படி வரச் சொல்', என்று என் தந்தை தாய்க்குக் கட்டளையிடுவது என் காதில் விழுந்தது. உடனே எனது தாயும், "நீங்கள் கூப்பிடுவதற்கு முன்னேயே அவளே வந்து கொண்டிருக்கிறாள்" என்று சொன்னாள். தந்தை கூடத்தின் ஓரத்திலே அவருக்கு வழக்கமாயுள்ள ஆசனத்திலே அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரே ஒரு கத்தை சாதகங்கள் கிடந்தன. அவற்றை ஒவ்வொன்றாகப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். பக்கத்தில் போய் நின்ற நான் "கூப்பிட்டீர்களா அப்பா" என்றேன். ஆமாம் மங்களம், உன்கல்யாண விஷயமாய்த்தான் அம்மா என்றார். எனக்குச் சற்று வெட்கமாகவுமிருந்தது. திருமணத்தைப் பற்றி நான் அவரிடம் என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்பது முதலில் தெரியவில்லை. இருந்தாலும் இதுதானே நமக்குக் கிடைத்த சந்தர்ப்பம். இந்நேரத்தில் தானே நமது குறிக்கோளைச் சொல்லி அடைய முடியும். இப்போது வெட்கப்பட்டால் நாளை வேதனைப்பட வேண்டுமே, என்றெல்லாம் நினைத்து மெதுவாகத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டேன். என் மௌனத்தைக் கண்ட அவர், அடுத்த மாதம் பத்தாந் தேதி, நாள் நிச்சயமாகி விட்டது என்றார். உடனே தானாகவே என் கண்கள் காலண்டரை நோக்கின. தேதி இருபது ஆயிற்று. இன்னும் இருபது நாட்களேதான் இருக்கின்றன. எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒருவாறு நிலைமையைச் சமாளித்துக் கொண்டு, எனக்கு என்னப்பா, இப்போ கல்யாணத்துக்கு, அவசரம், மெதுவாய்ப் பார்த்துக் கொள்ளலாமே என்றேன், மெதுவான குரலிலே.

"அட, அசடே, நீ என்ன இன்னும் பாப்பாவா? வயதாகவில்லையா உனக்கு?" என்றார் அவர்.

"என்னப்பா அப்படி வயதாகிவிட்டது. பதினான்குதானே ஆகிறது. அதற்குள் என்ன அவசரம்" என்றேன் நான்.

"நன்றாய்ச் சொன்னாயே, ஊரார் என்ன சொல்வார்கள் வயது வந்த பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு இன்னும் ஒரு ஏற்பாடும் செய்யாமலிருக்கிறானே, பார்த்தாயா என்று இப்பவே சிலர் பேசுவது என் காதில் விழுகிறதே" என்றார்.

"ஊராரின் உளறலுக்காக என் வாழ்வைப் பாழாக்குவதா அப்பா?"

"வாழ்வைப் பாழாக்குவதா?—அட பைத்தியமே. வாழ்வைப் பாழாக்கத்தான் கல்யாணம் செய்து வைக்கிறார்களா?"

"இவ்வளவு இளமையிலேயே குடும்பச் சுமையை ஏற்றுக்கொள்ள வேண்டுமா?"

"உன்னையொத்த வயதுள்ள பெண்கள் எத்தனையோ பேர் கல்யாணஞ் செய்துகொண்டிருப்பது உனக்குத் தெரியாதா?"

"சரி, எனக்குக் கணவராக வரப்போகிறவரை நானே தேர்ந்தெடுத்துக்கொள்ளவாவது உரிமை அளியுங்கள்."

"நீயேதேர்ந்தெடுக்கப்போகிறாயா? அப்படியானால் நான் பார்த்திருக்கிறவன் உனக்குப் பிடிக்காதோ. நன்றாய்ச் சொன்னாய். உங்கம்மா என்னைத் தேர்ந்தெடுத்துத்தான் கல்யாணம் பண்ணிக்கொண்டாளா என்ன?"

"அதெல்லாம் அந்தக் காலம். இப்போதான் எல்லாம் தலை கீழ்ப் பாடமாய்ப் போச்சே," என்றாள் என் தாயார் குறுக்கிட்டு.

"சரி, உனக்குப் பிடித்தமானவனைத்தான் சொல்லேன்பார்ப்போம்." என்றார் என் தந்தை.

"ஆம், ஒரேயடியாகத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, அவர் பெயரைச் சொல்லிவிட்டேன்"

"என்ன? இன்பமணியா?" எனப் பித்துப் பிடித்தவர்போல் உரக்கக் கூவினாரிருவரும்.

"அவன் என்ன சாதி? நாம் என்ன சாதி? அவனைப் போய்......"என்று பல்லைக் கடித்தார் தந்தை.

"அது மட்டுமா, அவன் பெரிய நாஸ்திகனல்லவோ! எல்லோரும்சமம் என்று பேசுகிற கூட்டத்தைச் சேர்ந்தவனாச்சே! அந்தப் பயலை........." என்று ஆத்திரத்தில் கத்தினாள் தாய்.

"சாதி, சாதி என்கிறீர்களே. நீங்கள் காங்கிரஸ்காரர்கள் தானே அப்பா. சாதி வேற்றுமை பாராட்டக்கூடாதென்று எத்தனை தடவை நீங்களே சொல்லியிருக்கிறீர்களே. நம்ம பாரதியார், சாதிகள் இல்லையடி பாப்பா, என்றும், வேதியராயினுமொன்றே அன்றி வேறு குலத்தினராயினுமொன்றே என்றும் பாடியிருக்கிறாரே."

"பாரதியார் பாடிவிட்டால் அதுதான் வேதவாக்கோ. கர்மம்! கர்மம்!! நீ எனக்கு மகளாக வந்து சேர்ந்திருக்கிறாயே."

"அப்பா?"

"அப்பா என்று கூப்பிடுகிறாயா? அட கர்மமே! உன் வாயாலா அப்பா என்கிறாய்" என்று சீறி விழுந்தார்.

"மனதுக்குப்பிடித்தவரை மணக்க எனக்கு உரிமையில்லையா?"

"ஆஹா? பேஷாய் உரிமை உண்டு. ரோடிலே, போறவன், வர்ரவன் எல்லாருந்தான் மனசுக்குப் பிடிச்சிருக்கும். செய்து கொள்ளலாமே!"

"நான் உங்கள் மகள் என்பதையும் மறந்து கேவலமாகப் பேசுகிறீர்களே."

"நான் உன் தகப்பன் என்பதையும் மறந்து அந்தப் பயலைத்தான் மணப்பேன் என்றாயே, அது கேவலமாயில்லையா? உன்மீது குற்றமில்லை. உன்னிடம் இதைச் சொல்ல வந்தேனே. சரி, சரி, உன்னிஷ்டத்துக்கு இங்கு எதுவும் நடக்கா" தென்றெழுந்தார். அழுதேன், கெஞ்சினேன், காலைப் பிடித்துக் கொண்டு கதறினேன். பலனில்லை.

எனது காதலர் இன்பமணி! ஆம். அவருடைய புற அழகிற்காக அவரைக் காதலிக்கவில்லை. அவருடைய அக அழகிற்கே அவருக்கு நான்

அடிமையானேன். அப்படியென்றால் புற அழகிலும் அவர் குறைந்தவரில்லை. ஆம், உடலழகைவிட, உள்ள அழகே, என்னை மிகவும் கவர்ந்தது. நேர்மையான குணம், நிர்த்தாட்சண்ணியமான செயல், ஏழை வாழவேண்மென்ற எண்ணம். சமுதாயப் பொருளாதாரத் துறையிலே சமத்துவம் காணவேண்டுமென்ற துடிப்பு. அனைவரிடமும் அன்பொழுகப் பேசும் பண்பு. இவைகளெல்லாம் என் உள்ளத்தைக்கொள்ளைகொண்டு விட்டன. ஆனால் அவரை அடையவொட்டாமல் தடுத்தது இச்சாதி வேற்றுமைச் சனியன். ஆகவே அவருக்கு என் நிலையைத் தெரிவித்தேன். அதற்கு அவர் எழுதிய பதில் "பழுத்த வைதிகரும், புராணப் புளுகருமாகிய உனது தந்தை நிலை தெரிந்திருந்தும் நீ என்னைக் காதலித்தது தவறுதானே. அன்றே நான் உனக்குச் சொல்லவில்லையா, அவர் ஒரு போதும் நான் உன்னை மணக்கச் சம்மதியாரென்று. இது எதிர்பார்த்த விஷயந்தான் எனக்கு. உனக்கு இது திடீர் ஏமாற்றமாயிருக்கலாம்" என்று தெரிவித்தார்.

* * *

குறிப்பிட்ட நாளில் எனக்குத் திருமணம் நடந்தேறியது. நான் எவ்வளவோ வேண்டிக்கொண்டும் இன்பமணி எனது மணத்திற்கு வரவில்லை. ஆம், அவர் வராததும் ஒரு வகையில் நல்லதே.

"வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்." சமுதாயத்திலே வற்புறுத்தித்தானே பெண்களை கட்டிக்கொடுக்கின்றனர். எனது கணவரோ ஒரே கருப்பு. முகமுழுதும் அம்மை வார்த்த வடுக்கள். பார்வைக்குச் சிறிது விகாரமாகக் கூட இருப்பார். போயும், போயும், நம் மங்களத்திற்கு இப்படிப்பட்ட மன்மதனை எங்குதான் தேடிப் பிடித்தீர்களோ என்று என் தோழிகளில் சிலர் என்னைக்கேட்டதற்கு, அவனுக்கென்னடி குறைச்சல்; அவனுக்கிருக்கும் ஆஸ்தி ஒன்றே போதுமே. இரண்டு பேருக்கும் சாதகம் எவ்வளவு பொருத்தமாய் அமைந்திருக்கிறது தெரியுமோ, இதைப்போல் ஜோடியைப்பார்த்ததே இல்லை என்று என் வீட்டுக்காரர் ரொம்பப் பெருமையாய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறார்" என்றாள் என் தாய்.

அன்று — ஆம் முதல் நாளிரவு அவரைப்பற்றி அறிந்துகொண்டேன். பிஞ்சிலே பழுத்து வெதும்பிக்கொண்டிருக்கிறவரென்று. என் உள்ளத்திலே அவருக்கு எள்ளளவும் இடமில்லை. உடலைத்தான் அவரால் தீண்டமுடிந்தது. நாளடைவிலே தான், அவர் க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறாரென்ற திடுக்கிடும் செய்தியை அறிந்துகொண்டேன். என்மனம் மிகவும் வேதனைப்பட்டது. அதுமட்டுமல்ல, அடிக்கடி என்னிடம் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருப்பார். இப்படி மிருகத்தனமாக நடந்துகொள்வது எனக்கு வெறுப்பையும் கோபத்தையும் உண்டுபண்ணவே அடிக்கடி எங்கட்குள் சச்சரவு ஏற்படலாயிற்று. இது போன்ற சமயங்களில் என் மாமியாரும் வந்துவிடுவாள், "எண்டியம்மா? அவன்தான் சீக்காளிப்பிள்ளையாயிட்டான் என்று அலட்சியம்மா? அவன் மனசு கோணுமே நடந்துக்கொள்ளப்படாதா உன்னைக் கட்டினதிலிருந்து அவன் என்னடி சுகத்தைக் கண்டான்" என்று அங்கலாய்க்க ஆரம்பித்துவிடுவாள். இத்தனை வேதனையையும் தாங்கிக்கொண்டு, இயந்திரம்போன்றுகாலத்தைக் கழித்துக் கொண்டு வந்தேன். மணமாகி இந்த ஒருவருடத்திற்குள்ளே நோய் ரொம்ப ரொம்ப முற்றிவிட்டது. பார்க்காத வைத்தியரில்லை. போகாத ஆஸ்பத்திரியில்லை. இத்தொல்லை போதாதென்று மாமியையும் மற்ற வைதிகங்களையும் திருப்திப்படுத்த வேண்டிச்செல்லாத ஸ்தலயாத்திரை இல்லை, இவற்றாலெல்லாம் நோய் குறையவில்லை. நாளுக்குநாள் முற்றிக்கொண்டுவந்து படுக்கையிலே கிடத்திவிட்டது. ஓயாத, ஒழியாத இருமல். உடம்பு இளைத்து உருகிவிட்டது. பாலும், பழமும் தான் ஆகாரம். சிலசமயங்களில் இருமக்கூடச் சக்தியற்றுத்திணறும் கண்றாவிக்காட்சி. இவற்றையெல்லாம் இந்த இளம்வயதில் என்னால் தாங்க வேண்டிய வேதனை. இந்நிலையில் அவர் உயிரோடிருந்துதான் என்ன பயன்? சரியாக மணமாகிப் பதின்மூன்றுமாதங்கட்குள் அவர் இறந்து விட்டார்.

* * *

நான் நடத்திய குடும்ப வாழ்வு ஒருவருடம். அந்த ஒரு வருடமும் எப்படிப்பட்டதென்பதையும் சொல்லிவிட்டேன். ஆஸ்தி நிறைய இருக்கிறது, ஆனந்தமாய் வாழலாம் என்றார் அப்பா. ஆனந்தமென்பது என்வாழ்வில் அணுவளவும் இல்லை. சரியான ஜோடி. சாதகம் மிகப் பொருத்தம் என்றார் தந்தை. ஒரு வருடத்தில் கணவனை இழந்துவிட்டேன். மங்களம் என்ற என்பெயருக்கேற்றாற்போல் மங்களகரமான வாழ்வு என்றார் தந்தை. அமங்கலமாகப் போய்விட்டது என் வாழ்வு. இப்போது நான் ஓர் விதவை. எதிரே என்னைக் காணும் சிலர் முகத்தைச் சுளிப்பதும், முணுமுணுப்பதும் தெரிகிறது. போயும், போயும், இந்தத் தரித்திரம் எதிரே வருகிறதே, போற காரியம் உருப்படுமோ, என்னவோ, என்று பேசுவதும் கேட்காமலில்லை. இந்த இளம் வயதிலே (நல்) உடையிழந்தவள், உல்லாச வாழ்விழந்தவள், உருக்குலைந்து போனவள் நான். மஞ்சள், குங்குமம், மலர் கூடாது எனச் சொல்கிறதுமடைச் சமுதாயம். மனைவியை இழந்த புருடர்கள் மட்டும் இப்படி ஒதுக்கப்படுவதில்லையே. "தாதரென்ற நிலைமை மாறி, ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" என்ற பாரதியின் கொள்கை என்று இந்நாட்டிலே நிலவப் போகிறது?

என்னைப் பார்த்துவிட்டு, அழாக்குறையாக, "என்ன பண்ணுவது நீ கொடுத்து வைத்தது அவ்வளவு தாண்டி" என்கிறாள் தாய். ம்ம்...... அவரவர் தலைவிதி அனுபவித்துத்தான் ஆகவேண்டும் எனப் பெருமூச்சுடன் பேசுகிறார் தந்தை. கர்ம வினைப்படிதானே காரியம் நடக்கும். கண்ணீர் விட்டு என்ன பயன்? என்று ஊரார் உளறுகிறார்கள்.

விதியா என்னைச் சதி செய்தது? விதி என்று ஒன்று ஏது? வீணரின் சதியாலல்லவா வேதனை நான் படுகிறேன். காதலுக்கு முட்டுக்கட்டை போட்டது விதியா? சாதி வேற்றுமை கற்பித்தது விதியா? பணத்திற்கு என் பால்யத்தை பலியிட்டது விதியா? சோதிடத்தை நம்பி என் சுக வாழ்வைக் கெடுத்தது விதியா? விபரமறியாப் பருவத்திலேயே விதவையாக்கியது விதியா? வேடிக்கையாய்ப் பொழுது போக்க

(7-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 10—4—49 [காஞ்சி

# அவர்காட்டிய வழியில்!

ஓமந்தூரார் மந்திரிசபைமறைந்து, இராஜபாளையத்தார் மந்திரி சபை மலர்ந்துள்ளது. இந்த மாற்றத்தைக் காணக்கண்ணிலும்,கருத்திலும்கடும் விஷம் ஏந்தி, காங்கிரஸ் தோட்டத்திலே பலர் சுற்றிவந்தனர்—பலநாள் சுற்றிவந்தனர்! மாற்றத்திற்குப் பல வழிகளிலும் பாடுபட்டனர்.மாற்றம் அவர்களுக்குமகிழ்ச்சியையூட்டிநிற்கிறதா என்றால், இல்லை! மாறாக மருட்சியையே கொடுத்துள்ளது!

பிரதமர் பிடம் காலியானதும், அதில் பூக்கும் புதுமலர் தங்களுக்குக்களிப்பூட்டும் வகையில் புது மணத்தைக் கமழச்செய்யும் என்று எண்ணினர்போலும்! ஆனால் பூத்தபுதுமலர் பழையமணத்தையே வீசக்கண்டு ஓலமிட்டு நிற்கின்றனர். காங்கிரஸ் தோட்டத்தின் வேலிக்கு அப்பால் நின்றுகொண்டு காட்சியைக்காணும் நமக்கு மலர் பூத்தது தெரிகிறது. அதைச்சுற்றி நின்று ஓலமிடுவோரின் ஒலியும் கேட்கிறது.

தோழர் பி. எஸ். குமாரசாமிராஜா தற்பொழுது அமைத்திருக்கும் மந்திரிசபையில் இருவர் தவிர்த்து ஏனையோர் முன்பிருந்தவர்களாகவே இடம் பெற்றுள்ளனர். எதிர்பார்த்த மாற்றம் மந்திரி சபையில் ஏற்படாததுகண்டு, இது "புதுப்பிக்கப்பட்ட பழையமந்திரி சபையே" என்று மாற்றங்காண விரும்பியபத்திரிகைகள் பலவும் ஓலமிடுகின்றன.

அவைகளுக்கு ஏற்பட்டிருக்கும் மருட்சியை, உறுதிப்படுத்தும் வகையில், புதிய பிரதமரின் வானொலிப் பேச்சும் அமைந்திருக்கிறது.

"கட்சித் தலைவரிலோ அல்லது மந்திரி சபையில் இரண்டொரு அங்கத்தினரிலோ மாறுதல்ஏற்பட்டு விட்டதால், இதற்கு முன் இருந்த சர்க்காரின் கோள்கைகளுக்கும், எங்கள் கோள்கைக்கும் மாறுதல் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.''

என்று பிரதமர் பதவியேற்ற அன்று இரவு பேசிய வானொலிப்-பேச்சில் தோழர் குமாரசாமி ராஜ குறிப்பிட்டுள்ளார். ஓமந்தூரார் போட்டு வைத்த பாதையை ராஜபாளையத்தார் வேறு திக்கிற்குத் திருப்பமாட்டார் என்று எண்ணுவதற்கு மேற்குறித்துள்ள பேச்சு இடமளிப்பதாக அமைந்துள்ளது. அப்படி உண்மையாகவே அமையுமானால் காங்கிரஸ் வேலிக்குஅப்பால் நிற்கும் நமக்கும், நாட்டின் பெருங்குடி மக்களுக்கும், முழுவதுமில்லாவிட்டாலும்ஓரளவுக்காவது மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சியாக அது கொள்ளப்படும்.

ஓமந்தூராரிடத்திலே நேர்மை, நாணயம், உண்மையுணர்வு ஆகிய மணங்கள் கமழக் கண்டோம். மாற்றுக் கட்சியினர்க்கு மதிப்பளித்தல், அன்னவரின் கொள்கைகள் நாட்டில் நடமாட இடமளித்தல், எண்ண—எழுத—எடுத்துக் கூற உரிமை வழங்குதல்,பொதுவுரிமையைக் பறிக்காதிருத்தல் போன்ற மணங்கள் இராமசாமியார் ஆட்சியிலேயே கமழாதிருக்கும்போது குமாரசாமியார் ஆட்சியில் கமழுமா என்பது ஐயப்பாட்டின்பாற் பட்டதாகவே இருக்கின்றது!

நெஞ்சிலே கடுந் தீயை ஏந்தி ஓமந்தூரார் ஆட்சிக்கு உலை வைக்க எண்ணியவர்கள், அந்தச் செயலை மேற்கொள்ளக் கொண்ட காரணங்கள் இரண்டு ஆகும். ஒன்று வகுப்புவாரி பிரதிநிதித்வக் கொள்கைக்கு ஆதரவளிக்க முனைந்தது. இரண்டாவது இந்துமத அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்த முற்பட்டது. இத்தகைய வன்னெஞ்சினரின் கருத்துக்கு ஆதரவளிக்க, சுயநலக் காரணங்கள் பலவற்றால் தாக்குண்டவர்கள் ஓடியாடினர். அதன் விளைவாக ஓமந்தூரார் பிரதமர் பீடத்தினின்றும் இறக்கப்பட்டார்.

சுயநலவேட்டைக்காரர்களுக்கு வெற்றியா தோல்வியா என்பது குமாரசாமியார் செல்ல இருக்கும் வழியைப் பொறுத்திருக்கிறது. வீழ்ந்துபட்ட பெருங்குடி மக்களுக்குச் சமசந்தர்ப்பங்கள் அளித்து, ஒத்த உயர்நிலைக்கு அனைவரையும் கொண்டுவருவதற்கு ஏற்ற சாதனமாக இருந்துவரும் ஒரு பெருங் கொள்கையான வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறையைத் தொடர்ந்து கையாண்டுவருதலினாலும்,பொதுமக்களின்பேரால் கோயில்களிலும்,மடங்களிலும், அறநிலையங்களிலும் வீணர்க்குமட்டுமே பயன்படுமளவில் முடங்கிக்கிடக்கும் பெரும்பொருளை பொதுமக்களின் நலனுக்குப் பயன்படும்வகையில் ஓரளவுக்குத் திருப்ப முயற்சி செய்யும் அறநிலையப்பாதுகாப்புத் திருத்த மசோதாவைச்சட்டமாக்கிக் காட்டுவதன்மூலமும் தான் ,தோழர் குமாரசாமிராஜா ஓமாந்தூரார் இராமசாமியின் ஆட்சியைப்பின்பற்றிக் கொள்கையைத் தொடர்ந்து ஈடேற்றி வைத்ததாகக் கொள்ளமுடியும், கொள்ளவேண்டும்.

ஓமந்தூரார் நின்ற இடத்தில் இப்பொழுது தோழர் குமாரசாமி ராஜா ஏற்றப்பட்டிருக்கிறாராதலால், பொதுமக்கள் இனி நடக்கும் ஆட்சிமுறையை இதுவரையில் நடந்துவந்த முறையோடு ஒப்பிட்டுப் பார்ப்பார்கள் என்பதுஉறுதி. ஓமந்தூரார் தனிப்பட்டவர்களின் முகதாட்சண்யங்களுக்குக் கட்டுப்படாமல், தனக்குச் சரி எனப் பட்டதிலே கண்ணுங் கருத்துமாகஇருந்து, தொண்டாற்றி நிர்வாகத்திலே ஒருவித பிடிவாத முறையைக் காட்டி வந்துள்ளார். கள்ள மார்க்கட்காரர்களேயும், லஞ்சம் வாங்குவோரையும் தயை தாட்சண்யமின்றித்தண்டிக்கமுற்பட்டார் என்ற எண்ணம் பொதுமக்களின் உள்ளத்திலே ஊசலாடி அவரது ஆட்சிக்கு நல்லபெயரை வாங்கித் தந்துள்ளது. காங்கிரஸில் செல்வாக்குப் படைத்தோரும், பெரும் பதவி வகிப்போரும், காங்கிரசின் மூலம் சட்டமன்றம் புகுந்தோரும் அன்றாட அரசாங்க நிர்வாகத்தில் தலையிடும்போது ஓரளவுக்கு அம்மாதிரியான முயற்சிகளுக்கு எதிராக இருந்து குறைமதியினரின் போக்குக்குத தடையாக இருந்திருக்கிறார். நாணயமானவர் — லஞ்சம் வாங்காதவர் — நேர்மைக்கு மதிப்பு கொடுப்பவர்—பதவி மோகங்கொள்ளாதவர்—சில்லரைகளின் கெடு மொழி கேளாதவர் என்ற இத்தகைய பண்புகள்தாம் ஓமந்தூராரைப் பதவியில் இருத்தி வைக்கவேண்டும் என்ற உணர்வைப் பொதுமக்களிடத்திலே எழச் செய்தன. நாட்டின் நாலா பாகங்களிலிலும், எல்லாத் துறைகளிலும் ஊழல்கள் மலிந்து காணப்படும் இதுபோன்றநாட்களில் ஓமந்தூராரின் தலைமை நாட்டின் நிர்வாகத் துறையில் இருப்பது

நலம் என்றுகாங்கிரசின் போக்குக்கு வேறுபட்ட நோக்கங்கொண்ட வேறு பல இயக்கத்தினருங்கூட கருதி வரலாயினர். இப்படிப்பட்ட சூழ்நிலை வளர்ந்து வந்த நிலையில்தான், ஓமந்தூரார் பதவியைவிட்டு விலகியுள்ளார்.

இந்தச் சூழ்நிலையை மனதில் கொண்டு, தோழர் குமாரசாமி ராஜா ஆட்சிப்பீடத்தில் அமருவாரானால், அவருடைய ஆட்சி, பொதுமக்களால் வரவேற்கத் தக்கதாக அமையும். கள்ளச் சிந்தையரும், கொள்ளை இலாபக்காரரும், சுயநலங் கொண்டோரும், சூழ்ச்சி பல செய்வோரும், லஞ்ச மோப்பம் பிடித்தோரும், பொதுநலத்தில் நஞ்சு கலப்போரும் ஆகிய பண்பினரைப் பதவியிலேற்றப் பணி புரிவோரும், பக்கம் நின்று பராக்கு கூறுவோரும் குமாரசாமியாரைச் சுற்றி வல்லூறென வட்டமிடத் தொடங்குவார்கள். அத்தகைய வல்லூறுகளுக்கு இடமளிக்காமல் நிற்பாரேயானால், பதவி பறிபோனாலும், பண்பாவது காப்பாற்றப்படும்.

குமாரசாமியார் ஓமந்தூரார் காட்டிய நேரியவழியில் செல்லுகிறாரா அல்லது வைத்தியநாதஅய்யர் காட்டும் வளைந்தவழியில் செல்லுகிறாரா? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

●

## யாராய் இருந்தால் என்ன?

"மதம் என்ற பெயரில் அக்ரமங்கள் நடப்பதாகச் சர்க்காருக்குப் பல புகார்கள் கிடைத்திருக்கின்றன. எனவே, இந்தத் தீமையை ஒழித்து, மக்களைப் பாதுகாப்பது புனித கடமையாகும். பயத்தாலோ அல்லது தண்டனையைக் கருதியோ மக்கள் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்க முடியாமல் இருக்கின்றனர்.

யார் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் சரி, மதம் என்ற பெயரில் கொடுமைகள் புரிவதைச் சுதந்தர இந்தியா ஒரு போதும் சகித்துக் கொண்டிருக்காது."

பி. ஜீ. கேர்
பம்பாய் பிரதமர்
6—4—49

## விதியா?

5-ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டிய வேளையிலே வேதனைப்படச் செய்வது விதியா? நோயாளி என்று அறிந்தும், சாதகம் பொருத்தமாயிருக்கிறது என்று கூறி என் வாழ்வைச் சரியச் செய்தது விதியா? அல்ல — அல்ல — இவையெல்லாம் வீணர் கூட்டத்தின் சதி. இனி என் வாழ்வு என்னாவது? "மூதேவி, நீ வந்து புகுந்து என் மகனை விழுங்கி விட்டாயே" என்று திட்டி என்னைத் தாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டாள் என் மாமியார். பெண்ணுக்குத்தான் இந்த நாட்டிலே சொத்துரிமையில்லையே. மறுமணம் செய்து கொள்ள முடியுமா? கலப்பு மணமே கூடாதென்றவரா மறுமணம் செய்ய ஒப்புவார். மறுமணம் என்றால், கற்புப் போய்விடுமென்று கதறும் கயவர் கூட்டம்.

"கற்பு நிலையென்று சொல்ல
வந்தாரிரு,
கட்சிக்கு மஃது பொதுவில்
வைப்போம்."

என்றார் பாரதியார்.

ஆகவே ஆண்கள் பலதார மணஞ் செய்யும்பொழுது பெண்கள் மட்டும் ஏன் செய்து கொள்ளக்கூடாது? ஆணுக் கொரு நீதி, பெண்ணுக் கொரு நீதியா? எனக் கேட்டால், இது நாஸ்திகக் கூட்டமல்லவா எனச் சாற்றுகிறது, சமநீதி வழங்காத சதிகாரச் சமுதாயம்.

தலைவிதி, தலைவிதியென்று கூறித் தன்னம்பிக்கையும், தைரியமுமற்றுத் தாழ்ந்த நிலை யடைந்த தமிழகமே? விதி என்று கூறி மதியிழந்து விதவைகளைப் பெருக்கும் வீணர் சமுதாயமே! விதியை நம்பி மதியையிழந்து மக்களை மாக்களாக்கும் மூடச் சமுதாயமே? தலைவிதி என்ற பெயரால் தமிழ் நாட்டுப் பெண்களின்வாழ்வைத் தவிடுபொடியாக்கும் தற்குறிச் சமூகமே? நீ கூறு, என் எதிர்கால வாழ்வு எப்படியாவதென்று. இப்பதினைந்தாம் வயதிலேயே உலக சுகங்களை யிழந்து ஒதுக்கப்பட்டு ஆயுள் முழுதும், அவலவாழ்வு வாழத்தான் வேண்டுமா? விதவைகட்கு இந்நாட்டிலே விமோசனமே இல்லையா?

●

## சென்னையில்!

சென்னை மாகாணத்தில் மழை இல்லையென்ற காரணத்திற்காக, மழையைப் பொழிவிக்க வேண்டி கோயில்கள் தோறும் விசேஷப் பிரார்த்தனைகள் செய்யவேண்டும் என்று சென்னை அரசாங்கம், இந்து மத அறநிலையப்பாதுகாப்பு போர்டின் மூலம் உத்தரவிட்டிருக்கிறது. இதுமட்டுமன்றி சென்னை கேசவ பெருமாள் கோயிலில் மழைக்காக ஸ்ரீராமயக்ஞம் நடைபெறுகிறது என்றும் இதன் பயனாக அதிக மழை பெய்து பஞ்ச நிலை நிவர்த்தியாகும் எனப் பக்தகோடிகள் நம்புகின்றனர் என்றும் "தினமணி" செய்தி ஒன்று கூறுகிறது. இதற்காக 108 வைதிகர்கள் ராமாயணம்,மகாபாரதம், ஸ்ரீமத் பாகவதம் பிரபந்தம் ஆகிய வேதங்களை ஓதிவருகின்றனராம். ராம பஜனையும் சேர்ந்தாற்போல் நடைபெறுகிறதாம். நாள் பூராவும் ஹோமம் எழுப்பப்பட்டுப் பாராயணம் நடத்தப்படுகிறதாம். மாலையில் பஜனைகளும், உபன்யாசங்களும் உண்டாம். இரவு கோயில் கதவுகள் மூடப்படும் வரை காலையிலிருந்து தொடர்ந்து அர்ச்சனையும் நடைபெறுகிறதாம். சீதா கல்யாண தினத்திற்காக 108 தங்கத் தாலிகளும், பாதுகா பட்டாபிஷேக தினத்திற்கு 108 தங்கச் செருப்புகளும் தயாரித்து வைக்கப்பட்டிருக்கின்றனவாம்; இது இங்கே!

## பம்பாயில்!

மந்திர தாயத்துக்களை விற்பனை செய்யும்பொருட்டு, "நோய்கள் குணமாகும்; சகலத்திலும் வெற்றிபெறலாம்; விரும்பியதையடையலாம்" என்றெல்லாம் வெளியிடப்படும் விளம்பரங்கள், பொதுமக்களை ஏமாற்றுவனவாகும் எனக் கருதி அவற்றைத் தடைசெய்வது குறித்து பம்பாய் சர்க்கார் தீவிரமாக ஆலோசித்து வருவதாக, உள்நாட்டு மந்திரி தோழர் மொரார்ஜி தேசாய் 6—4—49 ம் நாளன்று, பம்பாய் சட்டசபையில் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

●

# அறிவியக்கமும் ★ ★ நல்லொழுக்கமும்

—✲—

பரிணாம வாதக் கொள்கையினால் பிரபஞ்ச உற்பத்தியைப்பற்றிய எண்ணற்ற தப்பெண்ணங்கள் ஒழிந்துவிட்டன. பிரபஞ்ச உற்புத்திக்கும் தெய்வீகத்துக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லையென்பதும் தெளிவாகிவிட்டது. பிரபஞ்ச உற்பத்தி வரலாற்றையும் மனிதவர்க்க சரிதத்தையும் உள்ளபடி யறிய வசதியும் வாய்த்துவிட்டது. அம்மட்டோ? மத அனுஷ்டான முறைகளின் காரணங்களை அறியவும், மக்கள் பின்பற்றவேண்டிய லக்ஷயத்தை நிர்ணயம் செய்யவுங் கூடப் பரிமணவாதம் உதவி புரிகிறது.

நல்லொழுக்கத்துக்கு கடவுள் வாக்கும் தெய்வீகமான மனச்சாட்சியுமே ஆதாரமென்று வைதீகர் நம்புகிறார்கள்.

ஆனால் நல்லொழுக்கத்துக்கும் தெய்வீகத்துக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை. தம் சுய அனுபவங்களின் பயனாகவே மக்கள் ஒழுக்கத்திட்டங்களை வகுத்திருக்கிறார்கள் என்றும், காலதேச வர்த்தமானத்துக்கு அநுகுணமாகப் பரிணாமமடைந்த உணர்ச்சியே மனச்சாட்சி என்றும், அதற்கும் தெய்வீகத்துக்கும் தொடர்பில்லை யென்றும் இப்பொழுது சந்தேகத்துக்கு இடமின்றி ருசுபடுத்தப்பட்டு விட்டது.

தற்காலப் புதுக்கோட்பாட்டின்படி, மனித சமூகங்களின் பல திறப்பட்ட அநுபவங்களின் பயனே நல்லொழுக்க விதிகளாகப் பரிணமித்திருக்கின்றன.

பிராணிகளுக்குள்ளும் சில ஒழுக்க உணர்ச்சிகள் இருந்து வருகின்றன. விசுவாசம், தைரியம், பரஸ்பர உதவி, பெற்றோர் அன்பு, ஆண் பெண் கூட்டுறவில் நேர்மை, ஆத்மதியாகம் முதலிய மேலான ஒழுக்கங்கள் பிராணி வர்க்கத்திலும் காணப்படுகின்றன. இவ்வொழுக்கங்களில் சிலவோ அல்லது பலவோபொருந்தியிருப்பதினாலே ஜீவிதப் போராட்டத்தில் பிராணிகள் வெற்றி பெற்று நிலவி வருகின்றன.

மனித சமூகத்திலும் பிராணி வர்க்கத்திலும் சில ஒழுக்கத் திட்டங்கள் இருந்து வருவதினாலேயே பொது க்ஷேமம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

எனவே பொதுநலத்துக்கு அனுகூலமான ஒழுக்கங்களை விருத்தி செய்துகொள்ள ஒவ்வொரு பிராணியும் முயலுகிறது. பொதுநலத்துக்கு ஊறு செய்யும் செயல்களெல்லாம் தனி நபர்களுக்கும் சமூகத்துக்கும் தீமையையே உண்டுபண்ணுகின்றன.

மனித சமூகமும் பிராணி வர்க்கமும் விருத்தியடைந்திருப்பதற்கு காரண காரணம், காரிய கோட்பாடே ஆதாரமாகும்

பல குடும்பங்கள் சேர்ந்தது ஒரு சமூகம், பல சமூகங்கள் கொண்டது ஒரு குடும்பம். எனவே மக்களுக்குள் தொடர்பு விருத்தியடைய அடைய ஒழுக்கத்திட்டங்களும் பெருகுகின்றன. சமூகங்களின் அந்தந்தக்கால நிலைமைக்கு ஏற்றபடி ஒழுக்கங்களும் உருவாகின்றன. அநுபவம் முதிர முதிர மக்கள் ஒழுக்கத்தில் விருத்தியடைந்ததற்குச் சரித்திரத்திலே ஏராளமான சான்றுகள் இருந்து வருகின்றன. தனிநபர்களுக்கும் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் தேசத்துக்கும் நலனளிக்கக் கூடிய ஒழுக்கங்களை மக்களே தம் அனுபவ முதிர்ச்சியினால் வகுத்துக் கொண்டனா. அவ்வக்காலத்துக்கு ஏற்றபடி ஒழுக்கங்களைத் திருத்தியும் மாற்றியும் அமைத்துக் கொண்டனர்.

ஸ்பென்சர் போன்ற அறிஞர்கள் விளக்கிக் கூறியிருப்பது போல, தமது சுற்றுச் சார்புகளுக்குப் பொருத்தமாக நடந்து மக்கள் நெடு நாளாகச் செய்துவந்த முயற்சியே சமூக சதாசார அபிவிர்த்திக்குக் காரணமாகும். ஒவ்வொரு மனிதனும் பூரண வளர்ச்சியடையவும் தனது ஆற்றலையும் உணர்ச்சிகளையும் மனித சக்தியையும் பயன்படுத்தவும் சதா முயன்று கொண்டிருக்கிறான். அதைப்போலவே பிறரும் முயற்சி செய்வதினால் ஒவ்வொரு தனி மனிதன் முயற்சிக்கும் சிறிது தடை ஏற்படுகிறது.

பிறருக்கு இடையூறு ஏற்படாமல் நமது வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வதே நல்லொழுக்கத்துக்கும் பொதுநலத்துக்கும் அடிப்படையாகும்.

பரிணாமக் கொள்கைப்படி ஒழுக்க உணர்ச்சி தோன்றியிருப்பதை நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் நமது தற்கால நல்லொழுக்க விதிகளின் மூல காரணங்களை அறிந்துகொள்ளலாம்; நன்மை தீமைகளை உணரும் மனச்சாட்சியின் தன்மையையும் உணர்ந்துகொள்ளலாம்.

பரிணாம வாதத்தை முன் நிறுத்திப்பார்த்தால் நல்லொழுக்கத்துக்கு தெய்வீகத்தை ஆதாரமாகக் கொள்வதைவிட மக்களின் சுயமுயற்சியை ஆதாரமாகக்கொள்வதே மேலெனவும் விளங்கா நிற்கும்.

தனி நபரின் க்ஷேமத்துக்கும் சமுதத்தின் க்ஷேமத்துக்கும் அதிகமாக உதவிபுரியக்கூடியவைகள் எல்லாம் நல்லொழுக்கத்தின் பாற்படக்கூடியவைகளேயாகும். மற்றவர்கள் உரிமைகளுக்குப்பாதகமேற்படாமல் ஒருவன் தன்சக்தி முழுமையையும் பிரயோகம் செய்தால் எப்பொழுதுமே அவனுக்குப் பேரின்பம் அனுபவிக்க முடியும்.

நல்லொழுக்கங்களுக்குத் தெய்வீகத்தை ஆதாரமாகக் கொள்வதைவிட இயற்கையை ஆதாரமாகக் கொண்டால் பிரத்தியட்ச பலன் கிடைப்பது நிச்சயம்.

ஒழுக்க விஷயங்களிலும் காரண காரியக் கோட்பாட்டுக்கு இடமிருக்கிறது. கர்மத்துக்குத்தக்கபடி பலன் ஏற்பட்டே தீரும். நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் பலதிறப்பட்ட செயல்களுக்குக் காரணமாக இருக்கிறது. நற்செயல்களுக்குப் பரிசளிக்க ஒரு சுவர்க்கத்தையும், தீச்செயல்களுக்கு தண்டனையளிக்க ஒரு நாகத்தையும் நாம் சிருஷ்டிக்கத் தேவையே இல்லை. சுவர்க்க நரகங்கள் இம்மண்ணுலகத்திலேயே இருக்கின்றன.

சமுக க்ஷேமத்தை முன்னிட்டும் குற்றவாளிகளைச் சீர் திருத்தும் பொருட்டும், சமுகம், குற்றம் செய்தவர்களுக்கு தண்டனையளிக்கிறது. ஆனால் நற்செயல்களுக்கு நல்லபலன் ஏற்படுவதையும், தீச்செயல்களுக்கு தீயபலன் ஏற்படுவதையும் எவராலும் தடுக்கமுடியாது. தினைவிதைத்தவன் தினை அறுப்பதும் வினை

விதைத்தவன் வினை அறுப்பதும் கடவுள் கட்டளையாலல்ல; இயற்கை விதிப்படியேயாகும். பிரார்த்தனைகளினாலோ, பச்சாதாபப் படுவதினாலோ, பாபமன்னிப்பினாலோ பாபங்களைப்போக்க முடியாது. தீச்செயல்களுக்குப் பரிகாரமாக நற்செயல்கள் செய்தால் ஒருகால் நாம் செய்த குற்றங்களுக்குப் பரிகாரம் ஏற்படலாம்.

கர்மத்துக்குத் தக்கபலன்என்பது கண்டிப்பான இயற்கை விதி. அதை எவராலும்மாற்றமுடியாது. இயற்கை விதி கண்டிப்பானதென்பதை உணரும்போதுதான் நாம் நல்லொழுக்கமுடைவர்களாயிருக்க வேண்டியது இன்றியமையாதது என்பது புலப்படும்.

பாபமன்னிப்பளிக்க ஒரு கடவுளில்லையானால் பாபிகளான மக்களுக்கு ஆறுதல் எப்படிக் கிடைக்கும் எனக்கிறிஸ்தவர்கள் கேட்கக் கூடும். பாப மன்னிப்புப் பெறலாமென்ற நம்பிக்கை பாபிகளுக்குஆறுதலளிக்கக் கூடியதாயிருக்கிறதென்றும் அவர்கள் சொல்லலாம்.

ஆனால் இந்தச் சந்தேகங்களுக்கு வெகு சுலபமாகப் பதிலளித்து விடலாம். அறிவியக்கம் மக்களுக்கு தாட்சண்யம் காட்டுவதுமில்லை; மக்களைக் கொடுமைப்படுத்துவதுமில்லை; நியாயமே வழங்குகிறது. தீச்செயலினால் தீமையே விளையுமென்று கூறும் அறிவியக்கம், நற்செயலினால் நலம் விளையுமென்றும் கூறுகிறது: தீச்செயல்களினால் ஏற்படும் பலன்களை எந்தக் கடவுளாலும் மன்னிக்க முடியாதென்று கூறும் அறிவியக்கம் தீச்செயல்களினால் ஏற்பட்ட பலன்களை நற்செயல்களினால் பரிகரித்துவிடலாமென்றும்வற்புறுத்துகிறது. எனவே தீமை செய்வதைத் தடுப்பதுடன் நன்மை செய்யவும் அறிவியக்கம் தூண்டுகிறது.

கடவுளை வணங்கிப் பாப மன்னிப்புப் பெறலாம் என்றநம்பிக்கையினால் ஏற்படும் தீமைகளையும் இங்கே விளக்கிவிடுகிறோம்.

நமது பாவங்களை மன்னிக்க ஒரு கடவுள் இருப்பதாக ஏற்பட்டுவிட்டால் புண்ணியம் செய்ய ஒரு தூண்டுதல் இல்லாதாகிவிடும். பாப மன்னிப்பளிக்கும் கத்தோலிக்கப் பாதிரிமார் நல்லொழுக்க விஷயங்களை மக்கள் அலக்ஷயம் செய்யும்படி தூண்டுகிறார்கள். பாபமன்னிப்பு ஒருபுரட்டாகும். பாபமன்னிப்புப் பெறலாம் என்று நம்புகிறவனுக்கு ஒழுக்கம் அதிகமாயிருக்குமா? நன்மையினாலேயே தீமையை ஒழிக்க முடியுமென்று நம்புகிறவனுக்கு அதிக ஒழுக்க உணர்ச்சியிருக்குமா?

"மனிதன் வீழ்ச்சி அடைந்தவன், பாவி" என்ற பழைய நம்பிக்கையை பரிணாம வாதம் வெட்டிவீழ்த்திவிட்டது.

மிருக நிலையிலிருந்த மனிதன் தற்கால உன்னத நிலையை அடைந்திருப்பதை உணர்ந்தவர்கள் மேலும் உயர்ச்சியடையவே விரும்புகிறார்கள். மனிதன் இப்பொழுதும் முன்னேறிச் சென்றுகொண்டே இருக்கிறான். அவன் மேலும் எவ்வளவு உயரிய நிலையை அடையப் போகிறானோ! யாரால் அதை அளவிட்டறிய முடியும்?

✻

# ★ காதலின் தன்மை! ★

(கவி தாகூர்)

பெண்ணுக்கு இடப்பட்டிருக்கும் வேலை முற்றிலும் மனிதனுக்குப் பதிலாக இருந்து செய்யக்கூடியவொன்றன்று; மனிதனது உலக வாழ்க்கையில் அவள் உறுதியாய்க்கூடவிருந்து ஒத்துழைக்க வேண்டியவளே; ஆனால் இவ்வாறு ஒத்துழைத்தல் என்பது அவனெனவே பாவித்து நடத்தலன்று என்பதை அவள் மனதிற்கொள்ளவேண்டும்.

பெணணென்பாளும் ஆடவனின் மற்றொரு பிரதியேயென விதிக்கப்பட்டிருப்பின், அவன் என்னசெயலை இயற்றவேண்டுமோ அதையே அவளும் வாழ்க்கையில் இயற்றிவர வேண்டுமென விதிக்கப்பட்டிருப்பின், நம் வாழ்வு விரைவிலேயே கசப்புற்றுவிடும். சுவையற்ற சக்கை போன்ற அத்தகைய ஒரு நீண்ட பயனில் வாழ்வை மக்கட் குழாம் ஒருநாளும் பொறுத்திராது.

பொருளுலகம் இவ்வாறாக, அறிவுலகத்திலோ பெண்ணென்பாளுக்குரிய வேலை ஆடவனது அறிவினாற்றலால் வெளிப்பட்டுநன்மைபயத்தற்குரியவாறு அவனது சுழுத்தி நிலையில் உண்ணின்று உணர்த்தலேயாகும். அவனுடைய சிந்தையும் உணர்வும் அறிவும் இயங்கவேண்டுங்காலத்தெல்லாம்அவள் அவனுக்கு முக்கிய தூண்டுகோலாகின்றாள். இவ்வாறுஇவள் பின்னின்று முன்னூக்கி வருவதினாலேயே அவள் புரியுமுதவியின் பெருமை நன்கு புலப்படாது மறைந்து நிற்கிறது.

அவளைவிட அவனுக்கு காலமும் சுயேச்சையும் இன்றியமையாதுரியதாகும்; அஃதேபோல் அவனைவிட அவளுக்கு மனோ வொருமையும் மனோ வெழுச்சியும் இன்றியமையாதுரியதாகும். காதலினாலும் அன்பினாலுமே பெண்மை உறுபயன் கொள்கிறது.

நிறைவு மிகுதி காரணமாக வரம்பினுட்பட ஒரு பொருளை அடைய அவன் முக்கியமாக ஆர்வங்கொள்பவனாகிறான். ஆனால் இவ்வாறு அகன்று செல்லுதலில்லாது அவள் தன் பக்குவ நிலையையடைவதற்கு மனோவொருமை என்ற ஒன்றுபட்ட மனத்தையே கைக்கொள்ளவேண்டியவளாகிறாள். இயற்கைத்தேவி உண்மையில்அவனை ஒருவாறு புறக்கணித்துத் தன்னுடைய முழுக் கவனத்தையும் அவள் மீதுதான் செலுத்துகிறாள் என்பது உண்மை.

## புத்தர் காட்டும் வழி

ஆகவே, இயற்கைத் தேவி தன் மாட்டுச் செய்த வஞ்சனைக்காக அவன் அவளை மதியாது ஒதுங்கிப் போவது ஒரு வழியில் முறையேயாகும். உதாரணமாக, வரம்பினுட்படாப்பரம்பொருளை யறியவேண்டித் தன் மனைவியாகிய கோபா என்பவளையுந் துறக்குமாறு புத்தரைத் தூண்டிய ஒரு உண்ர்ச்சி மனிதனுக்கே உண்மையாய்உரியதாகும். ஏனெனில் அவ்வாறே நேர்ந்தவிடத்துப் புத்தரைத் தூண்டிய ஒரு உணர்ச்சி மனிதனுக்கேஉண்மையாய் உரியதாகும். நேர்ந்தவிடத்துப் புத்தரைத் துறந்துவிடக் கோபா உரியவளாகாள், அவள் பெண்ணாதலின்.

இது கிடக்க, உண்மையாக ஆடவனைப் போன்ற ஆண்மையுற்ற மகளிருமிருக்கக் காண்கிறோம். ஆண்மையிருந்தும் பெண்மையைப் பெரிதும் அவாவும் ஆடவர்களையும் காண்கின்றோம். இவ்விருதிறத்தாரும் ஆடவரென்றோ மகளிரென்றோ பிரித்துக்

கூறக் கூடாதவர்களென்றே நான் கொள்வேன். ஏன் அவர்கள் தத்தம் பிறவிக்குரிய உண்மைப் பண்பைத் தெரிவிப்பவர்களாகார்.

மனிதனுக்குக் காதல் என்பது வேண்டாததொன்றாகாது. அதனால் தான் நான் புத்தர் கோபாவைக் காதலித்திருந்தாலும் இல்லாவிட்டாலும் இரண்டும் ஒன்றே என்று சொல்லுவதை ஆதரிப்பதில்லை. புத்தர்பக்குவ நிலையை யடைவதற்குக் காதல்வேண்டியதுதான். ஆனால் அதுவே எல்லாமாய் ஆகாமல் அது அவருக்கு ஒரு பெரிய உதவியாகவமைந்ததென்றே கொள்ளுதல் வேண்டும். காதலென்ற மனோவெழுச்சி மகளிர்க்கு முதலெனும்பென அமைந்தவொன்றாகுமெனவே கூறலாம். ஆடவர்க்கோ அவர்களது வாழ்க்கைச் செலவில் அது ஒரு பெரிய விளக்கனயதேயாகும்.

உயர் நிலையிலிருந்த ஒரு மணமுடிந்த பெண் கணவனைவிட்டு மற்றொருவனோடு சென்றதாகக் கேள்விப்பட்டேன். அவள் அதனால் தன் அழிவையே தேடிக்கொண்டவளாகிறாள். ஒரு சிலர் அவள் வேறு விதமாய் நடந்துகொண்டிருக்க முடியாதென்று வற்புறுத்திக் கூறினர். அவர்கள் கூற்று உண்மையாகக் காதலிக்கும் ஒருவனையடைய ஒரு பெண் மற்றெல்லாவற்றையும் துறக்கத் தாமதிக்கக் கூடாதென்றும், உண்மைக் காதலடையும் ஒரு அவாவிற்கு அவளுடைய மற்றெவ்வகைத் தாய உணர்ச்சிகளும் அடிப்படுத்தப் படல் இருக்க வேண்டுமென்பதுமேயாகும்.

ஒரு சிலரோ இவ்வாறு கூறுதல் மிகையாகும் என்று சொல்கிறார்கள். மனிதனைவிடப் பெண் ஏன் தன் நலந்துறக்க உரியவளாயிருக்கின்றாள் என்பதற்குக் காரணம் நான் கூறிய "அவனைவிட அவளுக்கே காதலின்றியமையாததாகும்"என்பதிலே அடங்கியிருக்கிறதென்றே நம்புகிறேன். ஒரு பெண் உண்மைக் காதல் கொண்டால் அக்காதல் தானும் தன்னுடைய பெருஅகத்திலும் வன்மையிலும் மிக மூர்க்கமானதாய் மாறிவிடுகிறது. அதனால் தன்னுடைய காதலனையடைவதற்காக வேண்டி எக்காரியமும் செய்யப் பின்வாங்காதவளாகின்றாள்.

அப்படியின்றி மனிதனுடைய காதல் தன் பெருக்கத்தினால் அவனுடைய கடமைகளைச் செய்யமுடியாது தடுக்கக்கூடிய நிலைமையிலிருக்குமானால், அவன் தான் அவ்வாறு துறக்க முன் வந்ததற்கேற்ற நற்பயனை யடையவில்லையென்று விரைவிலேயே உணர்ந்துகொள்வான். அப்படி உணரவில்லையாயின் அவன் நாம் முற்கூறிய பெண்மையாகவும் ஆடவனேயாவான். தனக்குரிய கடமைகளையும், ஒருதனிக்காதல் காரணமாகத் துறந்துவிட்டதைக் குறித்து வருந்தாதிருப்பானேல் அவனுடைய இயற்கை ஆண்தன்மையைவிட பெண்தன்மையையே மிகைப்படக் கொண்டிருக்கிறதென்றே கொள்வேன்.

மனிதனை முதன்மையாகப் பரம்பொருளை நாடுவோன் அல்லது அடைய முயல்வோனென்று நான் கொள்வேனேயன்றி வேறுவிதமாகக் கொள்ளேன். அப்பரம்பொருள் தானும் கடவுளேயாயினுமாகுக; அல்லது வீடேயாயினுமாகுக; அல்லது அந்தந்தக்கருத்துக்கிசைந்த எதுவாயினுமாகுக; எனவே இவ்விழைவின் செலவைத் தடைப்படுத்தக் கூடியதும் அறியமுடியாத ஒன்றை அறிய முயலும் அவாவை யறுக்கக்கூடியதுமான எவ்வுணர்ச்சியும். அது, எவ்வளவு மேன்மையுடையதாயிருப்பினும் அவனுக்கு நிறைவை யளித்ததாகாது. காதல் ஒருபெரிய அனுபவ உணர்ச்சியாயிருக்கலாம். சுடர்விடுமொளியெனத் திகழலாம் — அதுதானும் எப்பொழுதெனில் நாம்மேற்கூறியவாறு தடை செய்யாதிருக்குங்காலே.

### தன்னலங் துறந்த காதல்

காதலென்றவொன்று குறித்து மற்றெல்லாவற்றையுந் துறந்துவிட்ட காரணத்தாலேயே பல அறிவின் மிக்க பெரியோர் புகழுடம்பு பெறாது புகையுடம்பு பெற்று நிற்கின்றனர்; காதலே எல்லாமாகும் என்பது அவர் கொள்கை. அது மகளிர் மாட்டுச்சரியான தொன்றாயினும் அது மனிதனுக்கொப்ப முடிந்த தொன்றாகாது. பெண்ணைப்போல காதலென்றவொன்றற்காக, வாழ்க்கையில் தான் செய்ய வேண்டிய வேலைகளையும் பெறக்கருதிய நோக்கங்களையும் ஒரு ஆடவன் துறந்துவிட முடியாது.

சமூகத்தினால் இயற்கைமீறிய காதலுக்காக தண்டனையடைவது போல் மனிதன் எல்லாவற்றையுந் துறந்துவிடநேருங்கால், அவனிடத்தில் உண்மையான காதலைக் கொண்டபெண் தான் அக்காதலுக்காக அவனை மட்டும் பெறும்விலை நாளாவட்டத்தில் அவனாற்றலுக்கு மீறியதாகிவிடும் என்பதை மறந்துவிடக்கூடாது. அதற்குக் காரணங்கேட்கின் அவன் பெண்ணல்ல. ஆடவன் என்றவொன்றுதான்.

ஆகவே காதலின் உண்மையுணர்ச்சியைப் பெற்று அது நம்முட் கலந்து பிரிவதாய் நிற்றல் வேண்டின் அதற்குரிய வேதனையாகிய விலையை நிலைத்து நிற்கும் ஆழ்ந்த இன்ப வேதனையாகிய விலையைக் கொடுத்துத் தானாகவேண்டும்.

இவ்விலை கொடுக்க நாம் முற்படாவிடின் காதலென்றது சொல்லளவாலே, ஒரு சித்திரத்தைப் போன்றோ சொல்லணியைப் போன்றோ நின்று விடுகிறது. அது நம்முள்ளிரண்டறக் கலந்த ஒரு பெரும் பேறாக மாறுதலில்லை. விலையொன்று மின்றிவறிதே கொடுக்கப்படும் ஒவ்வொன்றையும் நாம் உண்மைப் பொருளுணர்ந்து பெற முடியாது. அத்தகைய வொன்றைப் பெறுதற்குரிய பக்குவ நிலையை யடைந்து, அதைப்பெறுவதற்கு, உழைத்து அதற்காக நம் உயிரையுங் கொடுக்கவல்ல ஓர் மனப்பான்மையை யடைதல் வேண்டும். அப்பொழுதுதான் நாம் பெறும் பேறு நம்முள் உண்மையாகவும், பூரணமாகவும் கலந்து நிற்றற்குரியதாகும்.

*

### பசிக் கொடுமை!

பழைய வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த கே. பி. குப்புச்சாமி என்பவர், வேலை கிடைக்காத காரணத்தால் மூன்று நாட்கள் பட்டினி கிடக்க நேரிட்டதன் விளைவாக, 7-4-49-ல் ரயில் தண்டவாளத்தில் படுத்துத் தற்கொலை செய்ய முயன்றபோது அகப்பட்டு விசாரணையில் இருந்து வருகிறார்.

—

### அறிவிப்பு

கும்பகோணத்தில் "திராவிடநாடு" விற்பனையாளராக இருப்பவர்,

தோழர S. சோக்கநாதன்
45, மூர்த்திசெட்டித் தெரு,

வாசகர்கள் இவரிடம் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

## புலமைக்குப் பொருள்

2-ம் பக்கத் தொடர்ச்சி

போற்றிவந்தனர், என்ற போதிலும் அப்போற்றுதல் இன்றுன்று பேசப்படும் கடவுள்வழிபாட்டைக் குறித்ததாய் இருந்ததில்லை. பகலவனைப் போற்றுவதற்கு இயற்கையான பல காரணங்கள் இருந்தன. பகலவனைக் குறித்துப் பார்வையைச் செலுத்திக் கொண்டிருப்பதால், கண்களில் உள்ள நச்சுக்கிருமிகள் பகலவன் ஒளியில் நசித்துக் கண்களுக்கு ஒளி மிகுதியாகின்றது. இவ்வாறு செய்வதால் உடல் நலமும் ஆயுள் நீடிப்பும் பேணப்படுகின்றன. இந்த முறையை இன்றுன்றை மேல்நாட்டவர் பலர் கையாண்டு அதனுல் உடல் உரமும் நோயின்மையும், ஆயுள் நீடிப்பும் பெற்று வாழ்கின்றனர். அதோடு நெல் முதலான உணவுப்பொருள்கள் நன்ருக விளைவதற்கும் பகலவனே துணையாகவும் காரணமாகவும் நிற்கின்ருன். மழை பகலவனின்ஒளியின்றிப் பெய்யமுடியாதென் பதை இன்று விஞ்ஞானமுறையில் மழையைப்பெய்ய வைக்கும் ஆராய்ச்சியாளர்களும் கூறுகின்றனர்" என்று தொடங்கி, "அப்படிப்பட்ட பகலவனுக்கு ஒரு வடிவத்தைக் கற்பிக்க எண்ணிய அக்காலத் தமிழறிஞர்கள், அங்ஙனம் கற்பித்தார்கள். அதாவது, பகலவன் விடியற்காலையில் கடலினின்றும் கிளம்பி வருவது போல் தெரிவதால், கடலைஅவனுக்கு ஊர்தி (வாகனம்) ஆக்கினர். பகலவனுடைய ஒளி கடலில் படுவதால், அதன் வடிவம் பலநிறங்களையுடைய மயிலுக்கு ஒப்பானதாகத் தோன்றவே, பகலவனுடைய ஊர்தி மயில் என்று கூறப்பட்டது. இனி, பகலவனுக்குச் சேவற்கொடி எப்படி ஏற்பட்டதென்ருல், பகலவன் முதன்முதலில் நம்மால் பார்க்கப்படுவது விடியற்காலமாதலால், பகலவன் தோன்றிவிட்டான், எல்லாரும்விழித்தெழுங்கள் என்று கூறுவதுபோல் சேவல் கூவுவதால், சேவலைப் பகலவனின் கொடியாகக்கொண்டனர்"என்றும்இன்னும் பல காரணங்களைக் காட்டியும் பகலவன் முருகக்கடவுளான கதையைப் பகுத்தறிவாளர்களும் ஓரளவுக்கு ஒப்புக்கொள்ளும் முறையில் கூறி அவர்களுடைய பாராட்டுதலையும் பெறுவர். இவ்வாறு அங்கொன்றும்இங்கொன்றுமாகஏன்பேச வேண்டும் என்று எவரேனும் கேட்டுவிட்டாலோ, "எல்லாம் இந்தவயிற்றுப் பிழைப்புக்காகத்தான்" என்றுகூறித் தங்கள் வறுமையை முன்கொண்டு வந்துநிறுத்தி மன்னிப்புக்கேட்பது போல் பாசாங்கு செய்வர். எல்லோருக்கும் 'நல்லபிள்ளையாக' நடந்து கொள்ள வேண்டுமென்ற போக்கினுள்ள இவர்கள் ஏன் நேரான வழியில் செல்லாமல் சேற்றில்ஒருகாலும் ஆற்றில் ஒருகாலுமாக நடந்துகொள்கிருர்கள் என்ற கவலைதான் இவர்கள் பேரில் நமக்கு உண்டாகிறது.

ஆனுல், நம்முடைய தமிழ்ப் புலவர்களில் ஒரு சாரார் இருக்கிருர்கள், அவர்கள் அறிவுலகிற்கே நஞ்சூட்டுபவர்கள்! ஆணவத்தின் முழு வடிவத்தையும் அவர்களிடம்தான் காணமுடியும். தங்களைமிஞ்சிய அறிவாளிகள் எவரும் எங்கும் இல்லை யென்ற இறுமாப்போடு கூடியவர்கள்! தாங்கள் கூறுவது எதுவாயினும் அதனைத் தட்டிக்கூறித் தவறு கண்டுபிடிக்கும் தகுதி தரணியில்எவருக்குங்கிடையாதென்ற தான்தோன்றிகள்! ஏதாவதொன்றைத் தாம் ஆராய்ந்தால், அந்த ஆராய்ச்சியே முடிந்த முடிபென்று மூளையின்றி உளறுபவர்! மற்றவர்கள் ஆராய்ந்து கண்ட உண்மைகளை ஒப்புக்கொள்ள மறுக்கும் மமதையினர்! அதுமட்டுமல்ல, மற்றவர்கள் கூறும் உண்மைகளைக்கேலி செய்யும் கெடுமதியினர்! இப்படிப்பட்டவர்களின் தொகை தான் நம் நாட்டில் மிகுதியென்று கூடச் சொல்லலாம்.

நம்முடைய தமிழ்ப் புலவர்களில் ஒருவர், ஒருபாட்டுக்குப் பொருள் கூற முற்பட்டு, இதற்குமுன் அப்பாட்டுக்குப் பொருள் கூறியவர்களையெல்லாம் முட்டாள்கள் என்றும், தாம் ஒருவர்மட்டுமே புலமையின் எல்லையைக் கண்டவர் என்றும் பொருள் கொள்ளும் முறையில்பேசியிருக்கிருர். இவரால் எடுத்துக் கொள்ளப்பட்ட பாடல்,

"தாவாரமில்லை தனக்கொரு
வீட்டில்லை, தேவாரம்ஏதுக்கடி
-குதம்பா,தேவாரம் ஏதுக்கடி"

என்பதாகும். இந்தப் பாடலுக்கு இப்புலவர் கண்டுபிடித்த பொருள் தான் உண்மைப்பொருள் என்பதை விளக்கமுற்பட்ட இவர், மற்றவர்கள் இப்பாடலுக்குக் கூறிய பொருள்கள் எல்லாம் பொருத்தமற்றவை—பொருளற்றவை என்று கிண்டலும் செய்கிருர்.

"தாவாரமும் வீடும்தான் இதில் கூறப்பட்டனவா? ஆம் என்பார் சிலர், தாவாரமும் வீடும் இல்லாத பரதேசிக்குத் தேவாரம் எதற்கு என்பதுதான் இதன் பொருள்என்று கேலிகூடச் செய்வார்கள். ஏன்? அதுதான் உண்மைப்பொருள்என்று கூட அவர்கள் சொல்வார்கள்"என்பதாக இப்புலவர் பெருமகனுர்,மற்றப் புலவர்களைக் கேலி செய்து தாம் அப்பாடலுக்குக் கண்டுபிடித்த "உண்மைப்பொருளை' உரைக்கிருர். இதோ, அப்பொருள்!

'தாவாரம்' என்று அந்தப் பாடலில் வரும் சொல்லை இந்தப் புலவர், 'தா' என்றும் 'வாரம்' என்றும் இரு சொற்களாகப் பிரித்து, 'தா' என்ருல் 'வருத்தம்' என்று பொருள் என்பதாகவும், 'வாரம்' என்ருல் 'பங்கு' என்று பொருள் என்பதாகவும் கூறி, "பிறர் பெறும் துன்பத்தைப் பங்கிட்டுக்கொண்டு, அத்துன்பத்தை நீக்க வகையில்லாதவர்களுக்கு மோட்சம் கிடைக்காதாகையால், அப்படிப்பட்டவர்கள் தேவாரம் படிப்பதால் பயன் இல்லை" என்று அந்தப் பாடலுக்கு இந்தப் புலவர் புதுப் பொருள் விரிக்கிருர். தம்முடைய இந்தப் புதுப் புளுகுப் பொருள் விளக்கத்திற்குத் தொல்காப்பியரை வேறு துணைக் கழைக்கிருர். 'தாவாரம்' என்ற சொல்லை இரண்டாகப் பிரித்ததை எவரேனும் பிழையென்று கூறிவிட்டால் என்ன செய்வதென்றஞ்சிய இந்தப் புலவர், "தாவே வலியும் வருத்தமுமாகும்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தைத் துணைக் கழைத்துத் தம்முடைய வாதத்தை நிலைநாட்ட முயல்கிருர்—மோட்ச லோக வாழ்வுக்கு வழி திறந்து காட்டுகிருர். 'தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை' என்ற சொற்ருெடரில் வரும் "வீடில்லை" என்ற சொல்லுக்கு, 'மோட்சமில்லை' என்று பொருள் கூறுகிருர் இந்தப் புலவர்—தம்முடைய குறை மதியை வெளியிடுகிருர் கூச்சமின்றி!

இந்தப் பாடல் யாரால் பாடப்பட்டது? எப்போது பாடப்பட்டது? எதற்காகப் பாடப்பட்டது? எந்த நிலையில் பாடப்பட்டது? என்பனவற்றை உணராமலேயே ஏதேதோ உளறிக் கொட்டுகிருர். குதம்பைச் சித்தர் என்ற பெயரோடு விளங்கிய ஒரு துறவியால் இப்பாடல் பாடப்பட்டது. உலகில் நடைபெறும்

அட்டூழியங்களைக் கண்டு, உளம் நொந்து உலக வாழ்வை வெறுத்து நாடோடிகளாய்த் திரிந்து நாட்டுக்கு நல்லுரை பல வழங்கிய பலருள் குதம்பைச் சித்தரும் ஒருவர். உலக வாழ்வில் இருந்துகொண்டே உலக மக்களுக்கு நல்லுபதேசம் செய்தால், அதனை அவர்கள், ஏதோ தன்னலத்திற்காகச் செய்யப்படும் சூழ்ச்சி என்று கருதி ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றெண்ணிய பலர், தந்நலம் துறந்து தரணி சுற்றி நாட்டுக்கு நலம் பல செய்ய முயன்றனர். அவர்களில் இப்பாடலைப் பாடிய குதம்பைச் சித்தரும் ஒருவர். நாயன்மார்களால் பாடப்பெற்ற தேவாரத்தை ஏன் பாடவில்லை என்று அவருடைய மனம் கேட்டகேள்விக்கு விடையாக அவருடைய பகுத்தறிவினின்றும் எழுந்த பாடலே இது, "தேவாரம் பாடினால் மோட்சம் கிடைக்குமென்று கூறுகிறாயே, தேவாரத்தைப் பாடித் திரிந்தால் தங்கியிருப்பதற்குத் தெருத் திண்ணைக் கூடக் கிடைக்கவில்லையே! இதோ தெருத் தெருவாய் அலைகின்றேனே! இன்னுமா தேவாரத்தைப் பாடும்படி சொல்கிறாய்" என்று குதம்பைச் சித்தர் தம்முடைய மனதோடு நிகழ்த்திய போராட்டத்தின் விளக்கமும், தேவாரத்தைப் பாடினால் மோட்சம் கிடைக்கும் என்பது முழுப் பொய்யாகும் என்ற தெளிவுமே இப்பாடலால் வெளிப்படுகின்றது. இதனை அறிய முடியாத இந்தப் புலவர், தேவாரத்துக்கு உயர்வு தேட முற்பட்டுத் தொல்காப்பியரைத் துணைக்கழைத்துத் தொல்லைப்படுவதைப் பார்க்க நமக்கே பரிதாபமாக இருக்கிறது! நாலும் ஆறும் பத்தென்பதை அறிய நன்னூல் படிக்கவேண்டுமென்று கூறுபவருக்கும், 'தாவாரம்' என்ற சொல்லை இரண்டாகப் பிரித்து அதற்கு ஏதோ பொருள் கூறித் தேவாரத்துக்கு உயர்வு கொடுக்கத் தொல்காப்பியரைத் துணைக்கழைக்கும் இந்தப் புலவருக்கும் யாதாயினும் வேறுபாடு காணமுடியுமா?

தேவாரம் பாடக் கூடியவர்கள், பிறர் பெறும் துன்பத்தைப் பங்கிட்டுக்கொண்டு, அத்துன்பத்தை நீக்குபவர்களாய் இருத்தல் வேண்டும் என்று கூறும் இப்புலவர், தேவாரத்தைப் பாடிய நாயன்மார்கள், சமணர்களைக் கழுவில் ஏற்றியும், புத்தர்களை மண்டையில் அடித்தும் கொன்றனரே! இவைதான் பிறர் துன்பத்தில் பங்கு கொள்ளும் முறையா என்பதை ஏன் எண்ணிப் பார்க்க மறந்தாரோ!

தேவாரம், எதனை அடிப்படையாகக்கொண்டு பாடப்பட்டதென்பதைக் கூட இந்தப் புலவர் உணர்ந்து கொள்ள முடியாத நிலையில் நின்றுகொண்டு, ஓதுபவர்கள் பிறர்படும் துன்பத்தில் பங்கு கொள்ளக்கூடியவர்களாய் இருக்கவேண்டுமென்று கூறுகிறாரே என்பதை எண்ணும்போது, அப்படிப்பட்டவர் குதம்பைச் சித்தர் பாடலுக்குப் பொருள் காணத் தொல்காப்பியரைத் தேடிச் சென்றதில் வியப்பொன்றுமில்லை. தேவார — பிரபந்தங்களைப் பற்றிப் புகழ்ந்தும் வியந்தும் பேசவேண்டும், அதேபோது தொல்காப்பியத்திலும் இரண்டொரு சூத்திரங்கள் தெரிந்திருப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டும், இல்லையேல தம்மை ஒரு புலவர் என்று பிறர் மதிக்கமாட்டார்கள் என்றநிலையில் உள்ளவர்களன்றி மற்றெந்தப் புலவரும், தங்கள் புலமைக்கு அரண் செய்யும் பகுத்தறிவை விட்டுக் குறுக்குவழி சென்று தங்கள் குறைமதியைக் காட்டிக்கொள்ளவே மாட்டார்கள்.

தேவாரம் பாடப்பட்டதன் நோக்கமே, பிறரைத் துன்புறுத்துவதுதான் என்பதனைத் தேவாரத்தை நடுநிலையுடன் படிக்கும் எவரும் எளிதில் உணர்ந்து கொள்வர். தேவாரத்தைப் படிக்கும்போது ஒரு வைணவன் பக்கத்தில் நிற்கமாட்டான்—ஒரு சமணன் நிற்கமாட்டான்—ஒரு புத்தன் நிற்கமாட்டான்— இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், சமரச சன்மார்க்கம் பேசும் ஒரு சைவன்கூட அதன் பக்கத்தில் நிற்கமாட்டான். அந்த அளவுக்கு வசைமொழிகளை வாரி வாரி இறைத்திருக்கிறார்கள் தேவாரத்தைப்பாடிய திருஞான சம்பந்தரும் பிற நாயன்மாரும்! தெருச் சண்டைக்கு நிற்பவன் வாயில்கூட வராத வசைமொழிகள் பல தேவாரம் பாடிய நாயன்மார்கள் வாயினின்றும் வந்திருக்கின்றனவே!

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று பேசப்படும் இக்காலத்தில், பல கடவுளரை உண்டாக்கி, அவர்களுள்ளும் சிவனே பெரியவன்--மற்றவர் சிறியவர் என்று பேசும் சைவ விளம்பரப் பாடல்களான தேவாரத்தை ஏன் தெருத் தெருவாய்க் கொண்டு சென்று விற்கவேண்டுமென்றுதான் கேட்கிறோம்.

இலக்கண அரிச்சுவடி கூடத்தேவைப்படாமல் பொருள்களை மிகவும் எளிதாக விளங்கக்கூடிய முறையில் அமைந்த குதம்பைச் சித்தர் போன்றவர்களால் பாடப்பட்டபாடல்களுக்குத்தொல்காப்பியத்தைத் துணைக்கழைத்த இந்தத் துண்டுப் புலவரின் துடுக்குத்தனத்தை என்னென்பது!

குதம்பைச் சித்தர் போன்றவர்கள், தேவாரம் போன்ற பஜனைப் பாடல்களைப் பாடுவதால் மக்களுக்குப் பக்தியை உண்டாக்கும் பணியிலா ஈடுபட்டிருந்தனர் என்பதைக் கூட உணர முடியாதவர்கள், தங்களிடம் புலமை இருப்பதாகத் தண்டோராப் போட்டுத் திரிவதுதான் வேடிக்கையாக இருக்கிறது. இதைவிட வேடிக்கை, அப்படிப்பட்டவர்களின் பாடல்களுக்குப் பதவுரையும் விளக்கஉரையும் கூறமுற்படுவது! இல்லாத ஒன்றுக்கு இருப்பதாக ஏதோ ஒன்றைக் கொண்டுவந்து நிறுத்தி, வலிந்து பொருள் காட்டுவதன் வாயிலாக, இவர்கள், புலமைக்குப் பொருள் புளுகுவதுதான் என்ற இழிநிலையை ஏன் உண்டாக்கவேண்டும்? இந்தநிலை மாறி, உண்மையை உள்ளபடியே ஒப்புக்கொண்டு, அதனை உலகுக்கு உரைக்க நம்முடைய தமிழ்ப் புலவர்கள் முன்வரவேண்டுமென்ற நோக்கம் நமக்கு உண்மையாகஇருப்பதாலேயே, தவறு நம்முடைய நண்பர்களால் செய்யப்பட்ட போதிலும், அவர்கள் மேலும் தொடர்ந்து அத்தகைய தவறுகளைச் செய்து தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் இழிவை உண்டாக்காதிருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடனேயே இவற்றை எழுதுகிறோம்.

✽

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.